சார்பு நீதிமன்றம், மேலூர்
OS 275/2024

பெயர் : காந்திமதி
தகப்பனார் பெயர் :
கணவர் பெயர் :கோவிந்தராஜன்
வயது :85
கிராமம் :சொக்கம்பட்டி
வட்டம் :மேலூர்
தொழில் :வீட்டுக்குடித்தனம்

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

01.09.2025

வா.சா.1 முதல் விசாரணை:

நான் இந்த வழக்கில் வாதி. என்னுடைய முதல் விசாரணையை எழுத்து வடிவ பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் கண்ட சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டது தான். அதில் கண்ட சங்கதிகளை எல்லாம் படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன். 17.07.2022 தேதியிட்ட ரூ.2,00,000த்திற்கான கடனுறுதி சீட்டு அசல் வா.சா.ஆ.1. வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் அஞ்சல் ரசீது வா.சா.ஆ.2. அதை பிரதிவாதி பெற்றுகொண்டதை காட்டக்கூடிய அஞ்சல் ஒப்புதல் அட்டை வா.சா.ஆ.3. பிரதிவாதி தரப்பில் கொடுக்கப்பட்ட பதில் அறிவிப்பு வா.சா.ஆ.4. பூவம்மாளின் மாமியார் திருமதி.மீனாட்சி அவர்களுடைய 24.04.1997 தேதியிட்ட கிரைய பத்திரம் ஒளிநகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது வா.சா.ஆ.5.

(குறுக்கு விசாரணை வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

SAMUNDESWARIPRABHA
Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2025.09.01 16:58:10 +0530

Sub Judge

Melur